# பெரியாழ்வார் திருமொழி 3-2

## அஞ்சன வண்ணனை

(யசோதைப் பிராட்டி கண்ணனைக் கன்றின் பின் போக்கினதை எண்ணி அநுதபித்தல்)

234 * அஞ்சன வண்ணனை * ஆயர் குலக் கொழுந்தினை *
மஞ்சனமாட்டி * மனைகள் தோறும் திரியாமே **
கஞ்சனைக் காய்ந்த * கழலடி நோவக் கன்றின் பின் *
என் செயப் பிள்ளையைப் போக்கினேன் * எல்லே பாவமே (1)

235 பற்று மஞ்சள் பூசிப் * பாவைமாரொடு பாடியில் *
சிற்றில் சிதைத்து எங்கும் * தீமை செய்து திரியாமே **
கற்றுத் தூளியுடை * வேடர் கானிடைக் கன்றின் பின் *
எற்றுக்கு என் பிள்ளையைப் போக்கினேன் * எல்லே பாவமே (2)

236 நன்மணி மேகலை * நங்கைமாரொடு நாள்தொறும் *
பொன்மணி மேனி * புழுதியாடித் திரியாமே **
கன்மணி நின்றதிர் * கானதரிடைக் கன்றின் பின் *
என் மணிவண்ணனைப் போக்கினேன் * எல்லே பாவமே (3)

237 வண்ணக் கருங்குழல் * மாதர் வந்து அலர் தூற்றிட *
பண்ணிப் பல செய்து * இப்பாடி எங்கும் திரியாமே **
கண்ணுக்கினியானைக் * கானதரிடைக் கன்றின் பின் *
எண்ணற்கரியானைப் போக்கினேன் * எல்லே பாவமே (4)

238 அவ்வவ்விடம் புக்கு * அவ்வாயர் பெண்டிர்க்கு அணுக்கனாய் *
கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் * கூழைமை செய்யாமே **
எவ்வம் சிலையுடை * வேடர் கானிடைக் கன்றின் பின் *
தெய்வத் தலைவனைப் போக்கினேன் * எல்லே பாவமே (5)

239 மிடறுமெழும் எழுத்தோட * வெண்ணெய் விழுங்கிப் போய் *
படிறு பல செய்து * இப்பாடி எங்கும் திரியாமே **
கடிறு பல திரி * கானதரிடைக் கன்றின் பின் *
இடற என் பிள்ளையைப் போக்கினேன் * எல்லே பாவமே (6)

240 வள்ளி நுடங்கிடை * மாதர் வந்து அலர் தூற்றிட *
துள்ளி விளையாடித் * தோழரோடு திரியாமே **
கள்ளியுணங்கு * வெங்கானதரிடைக் கன்றின் பின் *
புள்ளின் தலைவனைப் போக்கினேன் * எல்லே பாவமே (7)

241 பன்னிரு திங்கள் * வயிற்றில் கொண்ட அப்பாங்கினால் *
என் இளங்கொங்கை * அமுதமூட்டி எடுத்து யான் **
பொன்னடி நோவப் * புலரியே கானில் கன்றின் பின் *
என் இளஞ்சிங்கத்தைப் போக்கினேன் * எல்லே பாவமே (8)

242 குடையும் செருப்பும் கொடாதே * தாமோதரனை நான் *
உடையும் கடியன * ஊன்று வெம்பரற்களுடை **
கடிய வெங்கானிடைக் * காலடி நோவக் கன்றின் பின் *
கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன் * எல்லே பாவமே (9)

243 * என்றும் எனக்கு இனியானை * என் மணிவண்ணனை *
கன்றின் பின் போக்கினேன் என்று * அசோதை கழறிய **
பொன் திகழ் மாடப் * புதுவையர்கோன் பட்டன் சொல் *
இன் தமிழ் மாலைகள் வல்லவர்க்கு * இடர் இல்லையே (10)